வடமராட்சிக்கான உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
கிளைக் காரியாலயம் தற்போது
மாலுசந்தி அல்வாயில்
கிளைப் பணிமனையில் செய்திகள் மற்றும் விளம்பரங்களை காலை 08.30 முதல் இரவு 10.00 மணிவரை கையளிக்கலாம்.
T.P: 021 4927 454, 077 120 9996

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 38
கதிர் : 91

சனிக்கிழமை 25 பெப்ரவரி 2023 | மாசி 13 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

விலை ரூ. 50
பக்கங்கள் 12

முச்சந்தி முரளி



"இல்லாத ஊருக்கு வழி சொன்னமாதிரி நடக்காத தேர்தலுக்கு நாள் குறிக்கினம் கண்டியளோ"

# தேர்தலுக்குப் புதிய திகதி மார்ச் 3 இல் வெளிவரும்!

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, பெப்ரவரி 25

திறைசேரியால் நிதி விடுவிக்கப்படாமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்படுகின்றது என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. அதற்கமைய தேர்தலை நடத்துவதற்கான தினத்தை மார்ச் 3 ஆம் திகதி அறிவிக்கவுள்ளதாகவும் தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. »11

வர்த்தகர்களிடம்

## கப்பம் கோரினால் உடன் முறையிடுக

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ்ப்பாணத்தில் வர்த்தகர்களிடம் கப்பம் கோரினாலோ அல்லது வியாபார நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தினாலோ எந்தவிதத் தயக்கமும் இன்றி முறைப்பாடு செய்யமுடியும். அவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் - என்று யாழ்ப்பாணம் மாவட்டப் »11

## யாழ்.ராணி மோதி முதியவர் உயிரிழப்பு

கிளிநொச்சி, பெப். 25

வவுனியாவிலிருந்து காங்கேசன்துறை நோக்கிப் பயணித்த யாழ். ராணி புகையிரதத்தில்மோதி இராமலிங்கம் இராஜேஸ்வரன் (வயது- 74) என்ற முதியவர் உயிரிழந்தார். கிளிநொச்சி -உமையாள்புரம் பகுதியில் நேற்று இந்த விபத்து இடம் பெற்றது. »11

## ரணில் ஒரு சர்வாதிகாரி! அநுர நேற்றுக் காட்டம்



கொழும்பு, பெப். 25

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி அல்லர். அவர்ஒருசர்வாதிகாரி. அதை அவர் தனது நடவடிக்கைகள் மூலம் நாள்தோறும் வெளிப்படுத்தி வருகின்றார்"- இவ்வாறு ஜே.வி.பியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். இரத்தினபுரியில் நேற்று »11

## நிரந்தரமாக மூடப்படவில்லை நீர்வேலி இ.த.க. பாடசாலை!

### மாணவர்கள் இணைந்தால் மீண்டும் ஆரம்பிக்கப்படும்

யாழ்ப்பாணம், பெப். 25

நீர்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, மாணவர்கள் பற்றாக்குறையின் காரணமாக யாழ். கல்வி வலயத்தின் வள அபிவிருத்தி நிலையமாக »11

தேசியத் தலைவர் பிர்பாகரன்

## உயிருடன் இருப்பதை அவரின் குடும்பத்தினரே கூறினார்கள்!

### பழ.நெடுமாறன் மீண்டும் ஆணித்தரம்

சென்னை, பெப். 25

தேசியத் தலைவர் பிரபாகரன் இன்னமும் உயிருடன்தான் உள்ளார். அதில் மாற்றுக்கருத்தில்லை என்பதை மீண்டும் தெரிவிக்கின்றேன். இதனை பிரபாகரனின் உறவினர்களே என்னிடம் »11

## கனேடியத் தம்பதியினர் மீது வாளால் வெட்டிக் கொள்ளை

### அனலைதீவில் கொடூரம்

யாழ்ப்பாணம், பெப். 25

கனேடியத் தம்பதியர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தி, பெருந்தொகைப் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் அனலைதீவில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

கனடாவில் இருந்து இரண்டு மாதங்களுக்கு முன்னர் வருகைதந்து வீட்டைப் புனரமைக்கும் பணியில் ஈடுபட்டவர்கள் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் நள்ளிரவு கதவை உடைத்துக்கொண்டு »11

## யாழ். போதனா கழிவுகளை வவுனியாவில் எரிக்கமுடியாது!

### செல்வம் எம்.பி. எதிர்ப்பு

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மருத்துவக் கழிவுகளை வவுனியா மாவட்டத்தில் எரிப்பதற்கு அனுமதிக்கமுடியாது - என்று »11

## காரை விட்டு தப்பிய கும்பல் வாள்வெட்டுடன் தொடர்பு

### பொலிஸார் வலைவீச்சு

யாழ்ப்பாணம், பெப். 25

தென்மராட்சி, மறன்புலவுப் பகுதியில் சந்தேகத்துக்கிடமாக பயணித்த காரொன்றை மறித்துச் சோதனையிட முற்பட்டவேளை, பற்றைக் »11

## தாயின் 2ஆவது கணவரால் 9 வயதுச் சிறுமி துஷ்பிரயோகம்

யாழ்ப்பாணம், பெப். 25

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், 9 வயதுச் சிறுமியொருவர் தனது தாயாரின் இரண்டாவது கணவரால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார்.

மருத்துவப் பரிசோதனையில் சிறுமி துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தாயின் இரண்டாவது கணவரால் (சிறுமி முதலாவது கணவரின் பிள்ளை) அந்தச் சிறுமி »11

Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
13 EDITION
JITF 2023
MARCH மார்ச்
3 4 5
9.00மு.ப - 7.00பி.ப
Muttraweli Grounds முற்றவெளி மைதானம்
இன்னும் 6 நாட்களில்
ORGANIZED BY LECS LANKA EXHIBITION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடக்கின் காற்றாலைத்திட்டம்

# நீண்டகாலப் பாதிப்புக்களை முதலில் ஆய்வு செய்யுங்கள்

## கிளிநொச்சி பிரஜைகள் குழு சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப். 25

மன்னார் மற்றும் பூநகரியில் காற்றாலை மின்னுற்பத்தித் திட்டத்தால் ஏற்படக்கூடிய சாதக, பாதக விளைவுகள் - சுற்றுச்சூழல் பாதிப்பு உள்ளிட்டவை வெளிப்படைத் தன்மையுடன் ஆய்வு செய்யப்பட வேண்டும் என கிளிநொச்சி பிரஜைகள் குழு வலியுறுத்தியுள்ளது.

காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்திட்டம் தொடர்பில் நேற்று ஊடக சந்திப்பு நடத்தப்பட்டது. இந்தச் சந்திப்பில் குழுவின் செயலாளர் எஸ்.ஜீவநாயகம் மேலும் குறிப்பிட்டதாவது:

காற்றாலை செயற்றிட்டம் தொடர்பில் அந்தந்த மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுடனோ மக்களுடனோ வெளிப்படையான உரையாடல்கள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் ஏற்படுகின்ற நீண்டகால சுற்றுச்சூழல் சார்ந்த பாதிப்புக்கள் மற்றும் விளைவுகள் சார்ந்த ஆய்வுகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

அயல்நாடான பங்களாதேஷில் அதானி செய்துகொண்ட ஒப்பந்தங்களை நிறுத்துமாறு அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது.

எமது அரசாங்கம் இரவோடிரவாக ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டு வெளிநாட்டு முதலீடுகளையும் நிதிகளையும் உள்ளெடுக்கும் நோக்கில் செயற்படுகிறது.

முதலில் இந்தக் காற்றாலை மின்னுற்பத்தி நிலையம் அமைப்பதால் ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல் பாதிப்பு தொடர்பில் ஆய்வு செய்யப்பட வேண்டும். அதில் வெளிப்படைத் தன்மைவேண்டும். பாமரமக்களுடனும், நிர்வாக மையங்களுடனும் கலந்துரையாடப்பட வேண்டும்.

இந்த விடயத்தில் அரசாங்கம் வியாபார நோக்கத்தை மாத்திரம் கருத்திற்கொள்ளாது ஏற்படும் விளைவுகள் தொடர்பில் அக்கறை செலுத்தவேண்டும்.

முறையான படிமுறைகளை- அணுகுமுறைகளை பின்பற்றி மக்களின் ஒத்திசைவோடு இந்தத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டும் - என்றார். (ச-113)

# எழிலன் உட்பட 3 பேரையும் மார்ச் 22 இல் முற்படுத்துக

## இராணுவத்தினருக்கு நீதிமன்று கட்டளை

வவுனியா, பெப். 25



இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமலாக்கப்பட்டார் எனக் கூறப்படும் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளராகச் செயற்பட்ட எழிலன் உட்பட மூவரை எதிர்வரும் 22ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்தவேண்டும் என வவுனியா மேல்நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளராகச் செயற்பட்ட எழிலன் மற்றும் பொன்னம்பலம் கந்தசாமி, உருத்திரமூர்த்தி கிருஸ்ணகுமார் ஆகியோரையே முற்படுத்துமாறு நீதிமன்று கட்டளையிட்டுள்ளது.

இறுதிக்கட்டப் போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்த இவர்கள் காணாமலாக்கப்பட்டமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு வவுனியா மேல்நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்தக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வழக்கின் மனுதாரர்கள் சார்பில் மன்றில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் ஊடகங்களுக்கு தெரிவித்ததாவது:

போரின் இறுதிக்காலப்பகுதியில் இராணுவத்திடம் சரணடைந்த குடும்ப அங்கத்தவர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு வவுனியா மேல்நீதிமன்ற நீதிவானால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அன்றைய் தினம் இராணுவத்திடம் சரணடைந்தவர்கள் இராணுவ வசம் இருக்கலாம் அல்லது காணாமல் ஆக்கப்பட்டிருக்கலாம் என்ற வகையில் தீர்ப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய எதிர்வரும் மார்ச் மாதம் 22 ஆம் திகதி அத்தகையவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த வேண்டும். அவ்வாறில்லையெனில் அதற்கான விளக்கங்கள் மன்றுக்கு அளிக்கப்படவேண்டும் என்று இராணுவத்தினருக்கு மன்று பணித்துள்ளது.

இவ்வாறு நீதிமன்றால் இலங்கை இராணுவத்துக்கு எதிராகக் கட்டளையாக்கப்பட்டுள்ளமையானது மழை, வெயிலென பாராது விடாமுயற்சியுடன் தமது உறவுகளுக்காகப் போராடும் குடும்பங்களுக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும் - நீதி மன்றம் மூலமாக எமக்குக் கிடைத்த நிவாரணமாக இதனைக் கருதவேண்டும்.

இலங்கை இராணுவத்தினரால் மறைக்கப்பட்டிருந்த - மறுக்கப்பட்டிருந்த பல உண்மைகள் இந்த வழக்கின் மூலம் வெளிச்சத்துக்கு வரும். காணாமலாக்கப்பட்டோர் எவரும் உயிருடன் இல்லை எனக் கூறிவரும் அரசாங்கம் இதன் பின்னராவது பொறுப்புக்கூறுதலை ஏற்றுக்கொள்ளவேண்டும் - என்றார். (ச-110)

# பிரதேசசபையின் தீர்மானத்தை உறுதிப்படுத்தியது நீதிமன்றம்

சாவகச்சேரி, பெப்.25

சாவகச்சேரி நவீனசந்தைக் கடை அறைகளை தற்போதைய வாடகையாளருக்கு மாற்றிக் கொடுப்பது தொடர்பாக சாவகச்சேரி நகரசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை சாவகச்சேரி நீதிமன்றம் ஏற்று கடைகளை வழங்க உத்தரவிட்டது.

சாவகச்சேரி நகரசபைக்குச் சொந்தமான நவீன சந்தை கடை அறையின் வாடகையாளர் சபையுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறி மற்றொருவருக்கு கடையை கைமாற்றியுள்ளார். இந்த விடயத்தை சபையின் கடந்த மாத அமர்வில் தவிசாளர் சமர்ப்பித்தார். அப்போது வாடகை உரிமையை மாற்றுவதாயின் 10 வருட வைப்பு நிதி செலுத்துவதுடன் முன்னைய வாடகையாளரும் தற்போதைய வாடகையாளரும் தலா 2 லட்சம் ரூபா வீதம் தண்டம் செலுத்த வேண்டும் என்று சபையில் தீர்மானிக்கப்பட்டது.

சபையின் தீர்மானம் தொடர்பாக தவிசாளர் சபையின் சட்டத்தரணி ஊடாக சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தார். இந்த வழக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நகரசபையின் தீர்மானத்தை நீதிமன்றம் உறுதி செய்தது.

அத்துடன் முன்னைய வாடகையாளர் உயிரிழந்திருப்பின் அவரின் மரணச் சான்றிதழ் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது. இதனையடுத்து தற்போதைய வாடகையாளரின் பெயருக்கு கடை அறையை மாற்றிக் கொடுக்க நகரசபையால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஒ-14,9)

### வடக்கு மாகாண

# போக்குவரத்து அதிகாரசபை அலுவலகம் கிளிநொச்சியில்

கிளிநொச்சி, பெப். 25

வட மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் அலுவலகம், கிளிநொச்சி சமுர்த்தி வங்கி முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டது. வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் மாகாண ரீதியான சேவைகள் எதிர்வரும் மார்ச் மாதம் முதல் குறித்த அலுவலகத்திலிருந்து இடம்பெறவுள்ளன.

அலுவலகத்தின் சேவைகளை பொதுமக்களும் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதுடன் போக்குவரத்து தொடர்பான முறைப்பாடுகளையும் தெரிவிக்க முடியும் என்று வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

நிகழ்வில், வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துல, கிளிநொச்சி மாவட்டச்செயலர் றூபவதி கேதீஸ்வரன், கரைச்சி பிரதேச செயலர் பா.ஜெயகரன், வட மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் பொது முகாமையாளரும் வடமாகாண திறைசேரியின் பிரதம கணக்காளருமான ஜெயராஜா உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர். (ஒ-14,113)

# கடன் மறுசீரமைப்பில் சீனா நழுவல்போக்கு

## அமெரிக்க நிதியமைச்சர் சுட்டிக்காட்டு



கொழும்பு, பெப். 25

இலங்கையின் மிகப்பெரிய கடன் வழங்குநர்களில் ஒருவரான சீனா இலங்கையுடனான கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் தனது ஆதரவைத் தெரிவித்தாலும் கடனைக் குறைக்க உதவுமா என்று கூறவில்லை. இவ்வாறு அமெரிக்க நிதி அமைச்சர் ஜேனட் யெல்லன் தெரிவித்துள்ளார்.

ஜி - 20நாடுகளின் நிதித் தலைவர்களின் கூட்டத்தின் ஓர் அங்கமாக இந்தியாவின் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை கடந்த வியாழக்கிழமை சந்தித்தபோதே இந்த விடயத்தை அவர் குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கவுள்ள அவசர கடனுக்கான நிபந்தனையாக இருதரப்பு கடனாளிகளிடமிருந்தும் கடன்குறைப்பை முன்வைத்துள்ளது. இலங்கை தனது கடனாளிகளிடமிருந்து கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கான நிதி உத்தரவாதங்கள் மற்றும் கூட்டு ஒப்பந்தத்தை எட்டுவதற்கு நம்பிக்கையுடன் முயற்சிகளை மேற்கொள்வது மிகவும் முக்கியமானது என்று சுட்டிக்காட்டியுள்ளது.

அதற்கமைய கடனில் சிக்கித் தவிக்கும் இலங்கை, சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதே நாட்டின் பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கான ஒரேவழி.

இலங்கையின் மிகப்பெரிய கடன் வழங்குநர்களில் ஒருவரான சீனா, தனது ஆதரவைத் தெரிவித்தாலும் கடனைக் குறைக்க உதவுமா என்று கூறவில்லை. கடனை மறுசீரமைப்பதற்கான சீனாவின் விருப்பத்தின் மீதான தாமதம் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது என ஜனாதிபதியும் ஒப்புக்கொண்டுள்ளார் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு

## அலுவலகம் மீண்டும் தூசு தட்டப்படுகின்றது

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் உள்ள மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு அலுவலகத்தில் துப்புரவுப் பணிகள் நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டன. முன்னாள் ஜனாதிபதி கோத்தபய ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் ஒருங்கிணைப்புக்குழுத் தலைவராக பதவிவகித்தார். அவர் பதவிவிலக்கப்பட்டு ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவராக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நியமிக்கப்பட்டார்.

அதனையடுத்தே மாவட்டச் செயலகத்தில் உள்ள ஒருங்கிணைப்புக்குழு அலுவலகத்தில், மாவட்டச் செயலக அலுவலர்களால் துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (ஒ-14)

## ஒருங்கிணைப்புக்குழு அலுவலகம் ஒரு கட்சிக்கான அலுவலகம் அல்ல

### யாழ்.மாவட்டச்செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு அலுவலகம் ஒரு கட்சிக்கான அலுவலகம் அல்ல. தற்போது அலுவலகத்தில் காணப்படும் நீல வர்ணமும் அகற்றப்படும் என்று யாழ்.மாவட்டச்செயலர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் உள்ள மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு அலுவலகத்துக்கு நீல நிற வர்ணம் பூசப்பட்டுள்ளமை தொடர்பில் நேற்று வெள்ளிக்கிழமை வினவியபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாவட்டச் செயலகத்தில் உள்ள ஒருங்கிணைப்புக்குழு அலுவலகம், ஒருங்கிணைப்புக்குழு அலுவலகமே தவிர கட்சி அலுவலகம் அல்ல. ஒருங்கிணைப்புக்குழு அலுவலகத்தில் ஏதாவது கட்சி சார்பான வர்ணம் தீட்டப்பட்டிருந்தால் அதை உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் - என்றார். (ஒ-14,20,26)

## ஆலயத்துக்குள் பாதணிகளுடன் நுழைந்த சஜித்தின் காவலர்கள்

### பொதுமக்கள் விசனம்



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் காவலர்கள் ஆலயத்துக்குள் பாதணிகளுடன் நுழைந்ததையடுத்து பொதுமக்கள் விசனத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

சண்டிலிப்பாய் கொம்பனிப்புலம் பகுதியில் சஜித்தின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. அதன் ஆரம்ப நிகழ்வாக அங்குள்ள ஆலயத்தில் வழிபாடு இடம்பெற்றது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு பாதுகாப்புக் கடமையில் இருந்த காவலர்கள் பாதணிகளுடன் ஆலயத்துக்குள் நுழைந்தனர். சஜித் பிரேமதாஸ பாதணிகளைக் கழற்றிவிட்டுச் சென்ற போதும் அவரது பாதுகாவலர்கள் பாதணிகளுடன் நுழைந்து அங்கிருந்த மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியது. (ஒ-14)

# நீதிமன்றக் கட்டளையை மீறி குருந்தூர்மலையில் விகாரை

## சட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டிய பொலிஸார் அதற்கு உடந்தை

முல்லைத்தீவு, பெப்.25

முல்லைத்தீவு குருந்தூர்மலையில் அமைக்கப்பட்ட விகாரை கட்டுமானப் பணிகளுக்கு தடைவிதித்து நீதிமன்று கட்டளை பிறப்பித்தபோதும் நீதிமன்றக் கட்டளையை மீறி விகாரை கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாட்டுக்கு முல்லைத்தீவு பொலிஸாரும் உடந்தையாக இருந்துள்ளனர்.

முல்லைத்தீவு, குமுழமுனையிலுள்ள தமிழ் மக்கள், பரம்பரை பரம்பரையாக வழிபட்டு வந்த குருந்தூர்மலையில் விகாரை அமைப்பதற்கு கடந்த வருடம் ஜூன் மாதம் முல்லைத்தீவு நீதிமன்றால் தடை விதிக்கப்பட்டது. நீதிமன்றக் கட்டளையை மீறி கட்டுமானப் பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து குருந்தூர்மலை ஆதி ஐயனார் ஆலயத்தினரும் அரசியல் பிரதிநிதிகளும் போராட்டத்தில் ஈடுபட்டதுடன் அதன் தொடர்ச்சியாக நீதிமன்றுக்கும் சுட்டிக்காட்டினர். அதற்கமைய, வழக்கு விசாரணைகள் நடைபெறும் நிலையில் அங்கு கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கப்படலாகாது என நீதிமன்றால் மீளவும் கடந்த நவம்பர் மாதம் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றக் கட்டளையை அவமதித்து எவராவது புதிதாகக் கட்டடங்களை அமைத்தால் அது நீதிமன்ற அவமதிப்பாக கருதப்படும். அவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றால் முல்லைத்தீவு பொலிஸார் அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்று உத்தரவிட்டது. இந்தக் கட்டளை வழங்கப்படும் போது பூரணமடையாத நிலையில் காணப்பட்ட குருந்தூர்மலை விகாரை கட்டுமானம் தற்போது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு பூர்த்தியாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதனையடுத்து குருந்தூர் மலைக்கு நேற்றுமுன்தினம் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் மற்றும் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான து.ரவிகரன், கந்தையா சிவநேசன் உள்ளிட்டவர்கள் விகாரையை பார்வையிட்டனர்.

அங்கு தொடர்ச்சியாக பௌத்த கட்டுமான வேலைகள் இடம்பெற்றமைக்கான அடையாளங்கள் காணப்பட்டன. இரவுவேளையில் இந்தக் கட்டுமானங்கள் இடம்பெற்றுள்ளன. அதற்கு ஆதாரமாக ஜெனரேட்டர் பொருத்தப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளமை தென்படுகிறது. இதற்குப் பொலிஸாரும் உறுதுணையாக இருந்துள்ளனர். கட்டுமானங்கள் இடம்பெறும் நேரத்தில் பொலிஸ் பாதுகாப்பும் அப்பகுதிக்கு வழங்கப்பட்டுள்ளது. கட்டுமானப் பணியில் ஈடுபடும் இராணுவ, சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள் பொலிஸ் பாதுகாப்புடன் மலையடி வாரத்தில் தங்கியிருப்பதை அவதானிக்க முடிந்தது என அவர்கள் குறிப்பிட்டனர். (ச-19)

## தமிழரின் விவசாயக் காணிகள் குருந்தூர்மலையில் ஆக்கிரமிப்பு

### தண்ணிமுறிப்பு மக்கள் எதிர்ப்பால் ஒத்திவைப்பு

முல்லைத்தீவு, பெப். 25

வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டி குருந்தூர்மலையில் 78 ஏக்கர் காணிகளுக்கு மேலதிகமாக பலநூற்றுக்கணக்கான காணிகளை அபகரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நிலஅளவீட்டுப் பணிகள் மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டுள்ளது.

குருந்தூர்மலையில் நேற்றுமுன்தினம் தொல்லியல் திணைக்களத்துக்கென காணி அளவீடு செய்வதற்காக கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர், காணிஉத்தியோகத்தர்கள், நிலஅளவைத்திணைக்கள உத்தியோகத்தர்கள் வருகைதந்தனர். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தண்ணிமுறிப்பு பகுதியைச்சேர்ந்த மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்ததாவது:-

குருந்தூர்மலைப்பகுதியில் அபகரிக்கப்பட்ட தமிழ் மக்களின் 78 ஏக்கர் காணிகளுக்கு மேலதிகமாக பலநூற்றுக்கணக்கான விவசாய நிலங்களை வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டி கடந்த ஆண்டு எவ்வித முன்னறிவிப்புமின்றி தொல்லியல் திணைக்களம் அபகரித்து எல்லைக்கற்களையும் நாட்டியது. அபகரிக்கப்பட்ட பகுதிகளுக்குள் தண்ணிமுறிப்பு மக்களுக்குரிய குடியிருப்புக் காணிகள், பயிர்ச்செய்கைக்காணிகள், பாடசாலைக்காணி, தபால் நிலையக்காணி, நெற்களஞ்சியசாலைக்குரியகாணிகள் என்பன அடங்குகின்றன.



1984ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட அசாதாரண நிலைமை காரணமாக இடம்பெயர்ந்த நிலையில் இதுவரை நாம் மீள்குடியமர்த்தப்படவில்லை.

இந்தநிலையில் அண்மையில் வவுனியாவுக்கு வருகை தந்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் "குருந்தூர்மலை தொல்லியல் பிரதேசத்துக்கானது என வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. தொல்லியல் திணைக்களம் சுட்டிக்காட்டும் 78 ஏக்கர் காணிகளுக்கு மேலதிகமாக 5 ஏக்கர் காணிகள் மாத்திரமே எடுத்துக்கொள்ளப்படும்" என்றார். அதற்கமைய பலநூற்றுக்கணக்கான விவசாய நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. தொல்பொருள் திணைக்களத்தின் இந்த அடாவடி நடவடிக்கைக்கும் எமது 40 வருட அகதி வாழ்வுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும் - என்றனர்.

அதற்கு மறுப்புத் தெரிவித்த கரைதுறைப்பற்று பிரதேச செயலர் கூறுகையில்,

தொல்பொருள் திணைக்களத்துக்கென வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள 78 ஏக்கர் காணிக்கு மேலதிகமாக 5 ஏக்கர் காணிக்கே நிலஅளவீடு செய்யப்படுகிறது. தொல்பொருள் திணைக்களம் அபகரித்துள்ள மக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டு வனவளத் திணைக்களத்திடம் வழங்கப்பட்டு பின்னர் வனவளத்திணைக்களத்திடமிருந்து மக்களுக்கு கையளிக்கப்படும் எனக் குறிப்பிட்டார்.

அதனை ஏற்க மறுத்து மக்கள், தொல்பொருள் திணைக்களம் எமது காணிகளை அபகரிக்க இடமளிக்கமுடியாது என எதிர்ப்பு வெளியிட்ட நிலையில் நிலஅளவீடு தற்காலிகமாக இடைநிறுத்தப்படுகிறது எனத் தெரிவித்து நிலஅளவையாளர்கள் அங்கிருந்து வெளியேறினர். (ச-246)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## புதுமணத் தம்பதிகளுக்கு ஊதியத்துடன் விடுமுறை

### சீனா பரிந்துரை

பீஜிங், பெப். 25

நாட்டின் பிறப்பு வீதத்தை அதிகரிப்பதற்கு சீன அரசாங்கத்தால் தற்போது புதுமணத் தம்பதிகளுக்கு ஊதியத்துடன் கூடிய 30 நாள்கள் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் அண்மைய ஆண்டுகளாக குழந்தை பிறப்பு விகிதம் சரிந்து வருகிறது.

பிறப்பு விகிதத்தை விட இறப்பு விகிதம் அதிகரித்து வருவதால் கடந்த 60 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு சீனாவில் மக்கள் தொகை சரிந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. அதனை ஈடுசெய்ய அந்தநாட்டு அரசாங்கம் புதிய திட்டங்களை அறிவித்து வருகிறது.

கடந்த ஆண்டு தம்பதிகள் 3 குழந்தைகளைப் பெறுவதற்கு சீன அரசாங்கம் அனுமதித்தது. தொடர்ந்து திருமணமின்றி குழந்தை பெறுவதற்கு அனுமதியளிக்கப்பட்டது. மேலும் அந்தநாட்டு இளைஞர்களை விந்தணு தானம் செய்யுமாறும் வலியுறுத்தப்பட்டது. இந்தநிலையில் அடுத்தகட்டமாக புதுமணத் தம்பதிகளுக்கு 30 நாள்கள் ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்கப்படுகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)


## உக்ரைன் - ரஷ்யா போர் ஓராண்டு நிறைவு

கீவ், பெப். 25

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து நேற்றுடன் ஓராண்டை எட்டியுள்ளது. நேட்டோவில் இணைவதற்கு உக்ரைன் மேற்கொண்ட முயற்சிகளை அடுத்து கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது.

போரில் ரஷ்யாவால் உக்ரைனின் பல நகரங்கள் சல்லடையாக்கப்பட்டன. ஏறத்தாழ ஒரு கோடியே 74 லட்சம் மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர் என ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கூறுகிறது. ரஷ்யாவின் இந்தப் போக்குக்குக் கண்டனம் தெரிவித்து மேற்கத்திய நாடுகள், அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் சபை என்பன கூட்டாகவும் தனித் தனியாகவும் பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்தன. அத்துடன் வல்லரசு நாடான ரஷ்யாவை போரில் சமாளிக்க உக்ரைனுக்கு அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் அதிநவீன ஆயுதங்களை வழங்கி கொடுத்து உதவி வருகின்றன. உக்ரைன்-ரஷ்யா போர் ஓராண்டை கடந்து நீடிப்பதற்கு உக்ரைனைக்கு வழங்கப்படும் ஆயுத உதவிகளே உந்துதலாக உள்ளது என அரசியல் ஆய்வாளர்களால் கணிக்கப்படுகிறது. (ச-இ)

## உலகின் பெரிய நகரம் 2030 இல் சவூதியில்



**ரியாத், பெப். 25**

**வானளாவிய கட்டுமானத் திட்டங்களைச் செயற்படுத்தி உலக நாடுகளை வியக்க வைக்கும் சவூதி அரேபியா, உலகின் மிகப் பெரிய நவீன நகரத்தை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.**

சவூதி அரேபியாவின் தலைநகர் ரியாத்தில் 2.5 கோடி சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் இந்தப் புதிய நகரம் அமையவுள்ளது.

இதற்கு 'முராபா' என்று பெயர் சூட்டப்படவுள்ளது. இந்தத் திட்டமானது 400 மீற்றர் உயரம், 400 மீற்றர் அகலம் கொண்ட கனசதுர வடிவ கட்டுமானமாக அமையவுள்ளது. இந்தப் புதிய நகரத்தில் 104,000 க்கும் மேற்பட்ட குடியிருப்புகள், 9 ஆயிரம் விடுதி அறைகள், 14 லட்சம் சதுரமீற்றர் அலுவலக இடம், 6.2 லட்சம் சதுரமீற்றர் ஓய்வு மையங்களுக்கான பகுதி மற்றும் 18 லட்சம் சதுர மீற்றர் பரப்பளவுக்கு சமுதாய வசதி கள், அருங்காட்சியகம், தொழில்நுட்பம் மற்றும் வடிவமைப்புப் பல்கலைக்கழகம், தியேட்டர் மற்றும் 80 .க்கும் மேற்பட்ட பொழுதுபோக்கு மற்றும் கலாசார மையங்கள் உள்ளிட்டவை அமையவுள்ளன. புதுமையான தொழில் நுட்பங்களைக் கொண்டு முக்கியமான அடையாளமாக 'முராபா' விளங்கும் எனவும் இந்தத் திட்டம் உள் ளூர் கட்டமைப்பின் வளர்ச்சிக்கு பங்களிப்பதுடன் சவூதியின் பொருளாதாரத்துக்கான வருமான ஆதாரங்களை வகைப்படுத்துவதற்கான முயற்சியாகவும் அமையும் எனவும் சவூதி அரசாங்கம் எதிர்பார்க்கிறது. இந்தப் புதிய நகரின் கட்டு மானப் பணிகள் 2030 ஆம் ஆண்டில் முடிவடையும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

### மரபுநோயால் பாதித்த சிறுவனுக்கு

## விவரங்கள் குறிப்பிடாது ரூ.11.6 கோடி வழங்கியவர்

சென்னை, பெப். 25

மரபு நோயால் பாதிக்கப்பட்ட சிறுவன் ஒருவனுக்கு தனது பெயர் உள்ளிட்ட விவரங்களை வெளியிடாது இந்திய மதிப்பில் 11.6 கோடி ரூபாவை ஒரே தடவையில் வழங்கியுள்ளார் வெளிநாட்டவர் ஒருவர்.

கேரள மாநிலம் எர்ணாகுளம் மாவட்டத்தைச் சேர்ந்த மரபு நோயால் பாதிக்கப்பட்ட சிறுவனுக்கே இவ்வாறு இந்தப் பெருந்தொகை பணம் கையளிக்கப்பட்டுள்ளது. குறித்த சிறுவனுக்கு அரிய வகை மரபணு நோய் பாதித்துள்ளதாகக் கடந்த மாதம் கண்டறியப்பட்டது. இரண்டு வயது நிறைவடைவதற்கு முன்பு அதற்கான சிகிச்சை அளிக்காதுவிடின் சிறுவனைக் காப்பாற்ற முடியாது என மருத்துவர்களால் தெரிவிக்கப்பட்டது. அதையடுத்து சிறுவனின் பெற்றோர் தங்கள் மகன் சிகிச்சைக்கு உதவி கேட்டு சமூக வலைத்தளங்களில் பதிவிட்டிருந்தனர்.

இந்தநிலையில் தனது பெயர் உள்ளிட்ட சுயவிவரங்களை வெளியிடவேண்டாம் என்ற கோரிக்கையுடன் வெளிநாட்டிலிருந்து ஒருவர் 1.4 மில்லியன் டொலர் தொகையைச் சிறுவனின் சிகிச்சைக்கு அனுப்பியுள்ளார். (ச-இ)

## இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** எதிர்பார்த்த பணம் கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். தொடங்கும் முயற்சிகள் சாதகமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழிபாடுகளை நிகழ்த்தும் வாய்ப்பு ஏற்படும். எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைக்கக்கூடும். உணவு விஷயத்தில் கவனம் தேவை.

**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் இழுபறியானாலும் முடிந்துவிடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். தொலைதூரத்திலிருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்ல தகவல் வந்து சேரும்.

**துலாம்:** பமனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். உறவினர்கள் வழியில் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும். கருத்து வேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**தனுசு:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். புதிய முயற்சிகளை மேற் கொள்ளவேண்டாம். உறவுகளால் செலவுகள் ஏற்படும். குழப்பம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**மகரம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். காரிய அனுகூலம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். எதிரிகளால் பிரச்சினை ஏற்படும். கவனமாக இருக்கவும். வியாபாரத்தில் கவனம் தேவை.

**மீனம்:** பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். உறவினர்கள் வகையில் வீண்மனஸ்தாபம் ஏற்படும்.

## நாம் வாழ்கின்ற வாழ்வே இயேசுவின் அடையாளம்




இயேசுவைப் புரிந்துகொள்ளவும் நம்பிக்கை கொள்ளவும் சில அடையாளங்களை எதிர்பார்க்கின்றோம். ஏரோது அரசன், கைதியாக நின்ற இயேசுவிடம் புதுமைகள், அற்புதங்கள், வீரதீரச் செயல்கள் ஏதாவது புரிந்து இறைமகன் என்ற அடையாளத்தை நிரூபிக்குமாறு கேட்டான்.

உலகின் முரண்பாடுகளுள் ஒன்று அடையாளங்களை வைத்துக்கொண்டே அடையாளங்களைத் தேடுவது. எம் வாழ்வின் ஒவ்வொரு நாளும் இறை இரக்கத்தின் அடையாளம்தான் என்பதை மறந்து விடுகின்றோம். காலையில் விழித்தெழும்போது நாம் உயிருடன் இருப்பதே இறைவனின் பேரிரக்கமும் அற்புதமும்தான் என்பதை உணரத் தவறுகின்றோம். அன்று முழுவதும் கடவுள் நம்மோடு உடனிருந்து வழிநடத்துவதை உணர்ந்து நன்றி செலுத்தத் தவறுகின்றோம். உண்ண உணவு, உடலை மறைக்க உடை, குடும்பம், உறவுகள், இயற்கை வளங்கள் அனைத்தும் இறைவனின் அடையாளங்களே. நம் வாழ்வில் ஒவ்வொரு நிமிடமும் இறைவன் தரும் அடையாளங்களால் நிறைந்துள்ள என்பதை உணர்ந்து நன்றியின் சாட்சிகளாக வாழ்வோம். மானிட வாழ்வு எப்போது தேக்கமடைந்து வலுவிழந்து போகிறதோ, அப்போது இயக்க ஆற்றலாக ஆர்ப்பரித்துப் பாயும் உன்னத சக்தியே இயேசுவின் அடையாளம். மக்களைப் பிரித்து ஆளும் வஞ்சகப் பாடுபாடு நடைபெறுகிறதோ அதற்கெதிராக ஒருங்கிணையும் போராட்டமே இயேசுவின் அடையாளம். நீதிக்காக உயர்ந்தெழும் குரலே இயேசுவின் அடையாளம்.

**எஸ்.யேசுதாஸ்**, கொழும்புத்துறை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்குத்தான்!

நடைபெறாத உள்ளூராட்சித் தேர்தலுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வெளியேறியமைதான் மிகப் பெரிய சோகம். இந்த வெளியேற்றத்துக்கு தமிழ் அரசுக் கட்சி காரணம் ஒன்றை தொடர்ச்சியாகக் கூறி வருகின்றது. 'தற்போதைய உள்ளூராட்சித் தேர்தல் முறைமை காரணமாக தொழில்நுட்ப ரீதியான காரணங்களின் நிமித்தம் நாங்கள் பிரிந்து போட்டியிடுகின்றோம்' என்பதே அந்தக் காரணம். அதாவது இந்தத் தேர்தல் முறைமையால் பிரிந்து போட்டியிட்டால் கூடுதல் ஆசனங்களைக் கைப்பற்றலாம் என்பதும் தேர்தலின் பின்னர் ஒன்றிணைவதன் ஊடாக இழுபறியில்லாத ஆட்சியமைக்கலாம் என்பதும் தமிழரசுக் கட்சியின் வாதம். அதற்கு வலுச் சேர்க்கும் வகையில் கீறல் விழுந்த இசைத்தட்டுப் போல அந்தக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசாவும், தேர்தலின் பின்னர் கூட்டமைப்பாக – ஒன்றாக எல்லோரும் சேர்ந்து ஆட்சியமைப்போம் என்பதைச் சொல்லி வருகின்றார். ஆனால், உண்மையதுவல்ல என்பது அவர்களுக்கும், தமிழ் மக்களுக்கும் நன்கு தெரியும். இருந்தாலும் அவர்கள் இதனைச் சொல்லி வருகின்றனர்.


கெட்டிக்காரன் புளுகு கூட எட்டுநாளைக்குத்தான் என்பதைப்போல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வெளியேறியமைக்கான உண்மைக்காரணம் அவர்களது வாய்ப்பேச்சுகளாலும் செயற்பாடுகளாலும் தென்பட ஆரம்பித்திருக்கின்றது. கரிநாள் போராட்டத்தை மட்டக்களப்பில் தனியாக தமிழ் அரசுக் கட்சி நடத்தியது. அப்போது நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் உரையாற்றும்போது, தமிழ்க் காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை உருவாக்கும்போது தமிழ் மக்களின் ஒற்றுமையை செல்வநாயகம் குலைத்துவிட்டார் என்று எவரும் குற்றம் சுமத்தவில்லை என்று குறிப்பிட்டார். அன்றைய சூழலும், இன்றைய சூழலும் வெவ்வேறு என்பதை அவர் தனது வசதிக்கு ஏற்றாற்போல் மறைத்துவிட்டார். அதைவிட, தமிழ் அரசுக் கட்சியின் தனித்துவத்தைப் பாதுகாப்பதற்காகவே இந்த வெளியேற்றம் என்பதை அவர் சொல்லாமல் சொல்லியுள்ளார். தொழில்நுட்பக் காரணங்களுக்காக வெளியேறினோம் என்பதெல்லாம் வெறும் சப்பைக் கட்டு என்பதையும் அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

இவை எல்லாவற்றுக்கும் அப்பால் மற்றுமொரு விடயம் இப்போது அரங்கேறியிருக்கின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைபற்று பிரதேசசபைக்கான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டிருந்தது. நீதிமன்றத்தை நாடியும் தமிழ் அரசுக் கட்சி தோல்வியையே சந்தித்தது. இந்த நிலையில் அந்தச் சபையில் போட்டியிடும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 'பினாமிக்' கட்சியின் பெயரில் தமிழ் அரசுக் கட்சி வேட்பாளர்களைக் களமிறக்குவதற்கு ஒப்பந்தம் செய்துள்ளது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சொல்வதைப் போல, தொழில்நுட்பக் காரணங்களுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியிருந்தால், தேர்தலின் பின்னர் மீண்டும் ஒன்றாக – கூட்டமைப்பாக – ஆட்சி அமைப்பதுதான் தீர்மானம் என்றால், கரைதுறைபற்று சபைக்கான தேர்தலில் இப்படி 'பின்கதவால்' போட்டியிட்டிருக்கவேண்டியதில்லை. ஏனெனில் அந்தச் சபைக்கான தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக தங்களை அடையாளப்படுத்துகின்ற ஜன்நாயக தமிழ்த் தேசியக் கூட்டணி போட்டியிடுகின்றது. ஒன்றில் அவர்களை வலுப்படுத்தியிருக்கலாம். இவர்கள் சொல்வதைப்போன்று தொழில்நுட்பக் காரணங்களுக்காகத்தான் தமிழ் அரசு தனித்துப் போட்டியிடுகின்றது என்றால், முஸ்லிம் காங்கிரஸின் பினாமிக் கட்சியிலுள்ளவர்கள் தேர்தலில் வென்ற பின்னர் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் இணைந்து ஆட்சியமைக்க ஒப்பந்தத்தை செய்ய வைத்திருக்கலாம். இவற்றைவிடுத்து தாமும் அந்தத் தேர்தலில் களம்காணவேண்டும் என்று தமிழ் அரசுக் கட்சி முடிவு செய்தபோதே, இந்தத் தேர்தலில் அவர்கள் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியமைக்கான காரணம் வெட்டவெளிச்சமாகிவிட்டது. ஒருகாலத்தில் கொள்கைக்காகவும், மக்களுக்காகவும் உறுதியாக நின்ற ஒரு பழம்பெரும் கட்சி, இப்படி பதவிக்காக குத்துக்கரணங்கள் அடிப்பது காலத்தின் கோலமா?

**நாளொரு நல்வார்த்தை**

"நேரம் என்பது ஒரு சிறந்த எழுத்தாளர். அது எப்போதும் சரியான முடிவை எழுதுகிறது"

– சார்லி சப்ளின்



## மு. காவுடன் இணைவதற்காகவா வெளியேறியது தமிழரசுக் கட்சி?

### தமிழ் அரசுக் கட்சியிடம் கேள்வி எழுப்புகிறது ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி

யாழ்ப்பாணம், பெப். 25

தமிழ் அரசுக் கட்சியினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியமைக்கான காரணம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமையின் கீழ் க்ளமிறங்குவதற்காவா? தேர்தலின் பின்னர் இணைந்து செயற்படுவோம் எனக் கூறிக்கொண்டதன் பொருள் இப்போது அனைவருக்கும் புரிந்திருக்கும்.

இவ்வாறு உள்ளூராட்சித் தேர்தலில் குத்துவிளக்குச் சின்னத்தில் போட்டியிடும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி வேட்பாளரும் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினருமான பா.கஜதீபன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு கரைதுறைபற்று பிரதேச சபைத் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஐக்கிய தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட இலங்கை தமிழ் அரசுக் கட்சி தீர்மானித்துள்ளது.

முன்பதாக கிழக்கு மாகாணசபைக்கான கடந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 11 ஆசனங்களை கைப்பற்றியிருந்தது. ஆயினும் 7 ஆசனங்களை கைப்பற்றிய சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு முதலமைச்சர் பதவியை கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தாரைவார்த்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் ஜனநாயக பண்புகள் நீடிப்பதற்குத் தடையாக இருந்த தமிழ் அரசுக் கட்சி தானாகவே கூட்டமைப்பை விட்டு வெளியேறியுள்ளது.

வெளியேறிய தமிழ் அரசுக் கட்சி தொழில்நுட்ப ரீதியாக தனித்துப் போட்டியிடப் போவதாக எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். பின்னர் நாங்கள்தான் கூட்டமைப்பு, தேர்தலின் பின்னர் கூட்டமைப்பாக இணைந்து செயற்படுவோம் என்றும் தெரிவித்தார். தனிக்கட்சியொன்று எப்படி கூட்டமைப்பாகும் என்ற சந்தேகம் பலருக்குமிருந்தது. இந்தநிலையில் நாங்கள்தான் கூட்டமைப்பு, தேர்தலின் பின் கூட்டமைப்பாக சேர்ந்து செயற்படுவோம் என அவர்கள் கூறியதன் அர்த்தம் விளங்குகின்றது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணையப் போவதையே அவர்கள் சூட்சுமமாக வெளிப்படுத்தியுள்ளனர் - என்றார். (ச-20)

## நாட்டின் நிலைமை தொடர்பில் வகுப்பெடுக்கத் தேவையில்லை

### ஜி.எல்.பீரிஸ் எகத்தாளம்

நாடு எதிர்கொண்டுள்ள நிலைமை மக்களுக்குத் தெரியும். அரசாங்கம் மக்களுக்கு வகுப்பெடுக்கத் தேவையில்லை. இவ்வாறு டலஸ். அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தேர்தலை நடத்தாவிடின் மக்களுடன் இணைந்து வீதியில் இறங்கி அரசுக்கு எதிராகத் தொடர்ந்து போராடுவோம். உள்ளூராட்சி சபைத் தேர்தலை அரசு உடனடியாக நடத்த வேண்டும். தேர்தலை ஒத்திவைக்கச் சாக்குப்போக்குக் காரணங்களைக் கூறுவதை அரசு நிறுத்தவேண்டும். நாட்டின் உண்மை நிலைமை மக்களுக்குத் தெளிவாகத் தெரியும். எனவே, மக்களுக்கு வகுப்பெடுக்கத் தேவையில்லை - என்றார். (ஒ-14,22)

**நாளை**

26.02.2023
ஞாயிற்றுக்கிழமை
மாசி 14

சுபநேரம் : 09.29 - 10.59
ராகுகாலம் : 04.59 - 06.29

கார்த்திகைவிரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாச்சி அம்மையார் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை நடத்தும் புண்ணிய நாச்சி அம்மையார் நினைவு நிகழ்வு, சைவபரிபாலனசபை மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சைவபரிபாலனசபைத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் கலந்துகொள்ளவுள்ளார்.

(ஒ-14)


## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி – 80 ரூபாய்

**077 334 1281** (CS 22924) (3/6)

---

உ

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

**யாழ். திருவண்ணை – கன்னாதிட்டி**

அருள்மிகு

## காளி அம்பாள் தேவஸ்தானம்
## சுபகிருது வருட மஹோற்சவம் 2023

கொடியேற்றம் : 26.02.2023 ஞாயிறு முற்பகல் 10.00 மணி
தேர் : 06.03.2023 திங்கள் காலை 8.00 மணி
தீர்த்தம் : 07.03.2023 செவ்வாய் காலை 8.30 மணி

தேவஸ்தான ஆதின கர்த்தாக்கள்

(CS 49265)(3/6)

---

## மணமகள் தேவை

1987 இல் பிறந்த பூசம்,
யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும்,
லண்டன் (PR) உடைய
மாப்பிள்ளைக்கு மணமகள் தேவை.

தொடர்பு:- சுபலக்ஸ்மி

**004474 66279770** (CS/23667/4.6)

---

## வாகனம் விற்பனைக்கு

NP DAC - XXXX இலக்கமுடைய 2015
BOLERO MAXITRUCI PLUS
அலுமினிய Full Body உடன்
விற்பனைக்குண்டு.

**077 978 9223** (CR 39316)(3/6)

---

# JOB VACANCY

We are a leading Sea food exporter in Sri Lanka and situated at Jaffna, looking for a competent and dynamic individual for the following job profiles.

### ASSISTANT MANAGER - EXPORT

**Responsibilities:**

- Managing the entire Export process to support the company's Processing and trading operations.
- Streamline the entire documentation and maintenance of files for inspection for auditors.
- Develop, Implement, improve systems and policies to administer documentation process required to import and export.
- Knowledge of BOI ,Imports and Exports procedures, logistics, customs processes and shipment handling are preferred .
- Ability to handle bank matters to clear import documents and present Export documents to banks to receive proceeds.

**Skills / Qualifications:**

- Degree / Diploma Level Professional Qualifications in Logistics / Shipping / Import and Export (CIM/SLIM Marketing )
- Experience of 2-5 years in an import and Export environment
- Process in depth and up to date knowledge of customs rules and regulations.
- Very Good Communications and Organizational skills.
- Male candidates in ages of 30-40
- Should be able to work independently and result oriented.

### ASSISTANT ACCOUNTANT

**The Job will involve**

- Daily accounting functions (in and outwards)
- Implementing control where necessary
- Managing all routine payments to statutory institutions etc.
- Arranging all payments
- Preparation of monthly management information
- Attending to all accounting function up to the final account for auditing
- Routine accounting correspondence and regular and timely updates.

**The ideal Gent we are looking at should be.**

- In the age group of 30-50 years and with a thorough accounting knowledge
- With part qualifications in CA/CIMA/ACCA or with a recognized degree in finance
- Able to prepare final accounts for auditing
- With at least 2 years' experience in an executive position handling similar accounting duties
- Thorough in all accounting function and familiar with payment such as EPF, ETF, VAT etc…
- Computer savvy and a good knowledge in Excel & QB , Busy
- Auditing experience will be an advantage
- Should be able to work independently and result oriented.

If you feel like you are the best candidate for the above vacancy, please forward your CV to the following E-Mail.

**E-Mail: info@suganth.lk**

**Please mention the post applying in the subject line of your E-Mail.**

---

# மணிவிழா வாழ்த்துக்கள்

25.02.2023




## திருமதி சிவராணி நந்தகுமார்

**(அதிபர், யா/ இளையதம்பி இந்து வித்தியாலயம்))**

**SLPS -2, BEd, Sc, SP Trd Maths Science**

வேலாயுதம் மனோன்மணி தம்பதியர் செய்தவத்தால்
மூளாயில் வந்துதித்த முத்தே!
பார் போற்றும் பெருந்தகையே!
பாரினில் உமக்கு நிகர் யாருளர்?
பண்புதனில் சிகரமாய் விளங்கிட பரமனும்
பரிசாக தந்தனனே கல்வியுடன் பதவிகளுமே
பெற்ற பரிசினையும் பழுதுபடா வ்ண்ணம்
பார்போற்ற நேர்கொண்டு அகிலமதில் வழங்கிட
இறையாசியால் கிடைத்ததே சீர்பெறு வாழ்வுமே!
கருத்தொருமித்த துணைவருடன்.
பேர் சொல்லும் பிரிய மக்களுடன்
வாழ்க! வாழ்கவே!
அகவை அறுபதில் மணிவிழா கோலம் பூண்டு
அன்பின் சிகரமாய் அன்னையின் வடிவமாய்
அகமதில் தூய்மையுடன் பொறுமை. புரிந்துணர்வு கொண்ட நீவிர்
குவலயம் போற்ற பெருமையுடன்.
வாழ்க! வாழ்கவே!!
விஞ்ஞானமுடன் கணிதமும் மாணவர் விருப்புடன் கற்றிட
கற்பித்தலில் புதுமைகள் புரிந்தே சித்திகள் பெறச்செய்து
விளையாட்டுப் போட்டிகளை திறம்பட நடத்தி
கல்விச் சமூகத்தினரை அன்புடன் நேசித்தே
நிர்வாகத் திறமை கொண்ட அதிபராய்
கல்விச்சாலை உயர்ந்திட உழைத்த ஆசானே!
வாழ்க! வாழ்கவே!!

Congratulations!

**அன்புடன் வாழ்த்தும் ஆசிரிய சகோதரிகள்:**

**செல்வி வை.இராதாசந்திரவதி**
(முன்னாள் உபஅதிபர், யா/ சன்மார்க்க மகா வித்தியாலயம்)

**செல்வி மூ.செல்வராணி**
(முன்னாள் உபஅதிபர், யா/ சன்மார்க்க மகா வித்தியாலயம்)

**திருமதி தி.ஸ்ரீகந்தராஜா**
(முன்னாள் ஆசிரியர், யா/ சன்மார்க்க மகா வித்தியாலயம்)

**திருமதி பு. முருகதாஸ்**
(முன்னாள் ஆசிரியர், யா/ நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயம் )

**செல்வி இ.வசந்தி**
(முன்னாள் ஆசிரியர் யா/வண்ணை நாவலர் மகாவித்தியாலயம்)

**செல்வி மூ. நனிதபாமினி**
(ஆசிரியர், யா/ செட்டித்தெரு மெதடிஸ் மிசன் பாடசாலை)

**திருமதி நிரஞ்சலா துரைமணி**
(முன்னாள் ஆசிரியர் தி/பாரதி தமிழ் வித்தியாலயம்)


(CS 33660)(3/6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 16 • 10 • 1937

ஆண்டவன் அடியில் 23 • 02 • 2023



## சுப்பையா கந்தையா

சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சுப்பையா கந்தையா நேற்றுமுன்தினம் (23.02.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், செல்லையா - அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் அன்னம்மா சிதம்பரப்பிள்ளை, மகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான அருள்நிதி, இராஜேஸ்வரன் மற்றும் குகனேஸ்வரன், பிறேமா, மோகனா ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபேந்திரா, விக்கினேஸ்வரன், கோணேஸ்வரன் ஆகியோரின் மாமனாரும், சந்தியா, சாகித்தியா, கௌதமன், விபியா, வீனுகா, விதுலன், நவீன், விருசிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.02.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.


(CS/23665)4.6

**கோணேஸ்வரன் (மருமகன்) - 0777 90 60 35**

# மரண அறிவித்தல்

தோற்றம் 17 • 05 • 1933

மறைவு 23 • 02 • 2023



## கந்தையா சச்சிதானந்தம்

(ஓய்வுநிலை ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்)

பன்னாலையைப் பிறப்பிடமாகவும், அம்பனை, தெல்லிப்பழையை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சச்சிதானந்தம் நேற்றுமுன்தினம் (23.02.2023) வியாழக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - சிவகாமிபிள்ளை தம்பதிகளின் மருமகனும், சிவயோகநாயகியின் அன்புக் கணவரும், அநிதா (கனடா), அமுதா, அருணன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமுருகாவின் (கனடா) அன்பு மாமனாரும், ரக்ஷிகா, ரக்ஷனா ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், காலஞ்சென்ற சிவானந்தம் மற்றும் புனிதவதி, திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (23.02.2023) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்பனை,
தெல்லிப்பளை

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/23670)4,6

**021 205 9704, 077 346 4386**

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 • 06 • 1933

மறைவு 22 • 02 • 2023



## திருமதி அன்னம்மா ஆறுமுகம்

அச்செழுவினை பிறப்பிடமாகவும் புகையிரத நிலைய வீதி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி அன்னம்மா ஆறுமுகம் அவர்கள் கடந்த (22.02.2023) புதன்கிழமை அதிகாலை தனது இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தங்கம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற சின்னப்பு ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான பூமணி, தர்மலிங்கம், சுந்தரலிங்கம், இராசமணி, இராசலிங்கம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, நவராசா மற்றும் அன்னபூரணம், தர்மதேவி ஆகியோரின் மைத்துனியும், நாகேந்திரத்தின் பாசமிகு தாயாரும், கோசலாவின் அன்பு மாமியாரும், சத்யன் - காயத்திரி, வித்யா- மயூரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அம்றிதா, அமாறா, ஐலா, முத்து ஆகியோரின் பூட்டியும், நவநீதன் - வதனி, ராஜினி - மோகனதாஸ், சுகந்தினி - சாந்திக்குமார், சர்மினி - நிகுஷன், நவபாலன் - நிஷாந்தி ஆகியோரின் பெரிய தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.02.2023) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி பொது மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 436 2892**
**077 601 6271**

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 05 • 05 • 1950

மறைவு 24 • 02 • 2023



## தியாகராசா சிவபாலசுந்தரம்

ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் பிள்ளையார் கோவிலடி உயரப்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா சிவபாலசுந்தரம் நேற்று (24.02.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராசா தையல்நாயகி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர் பூமணி தம்பதியரின் அன்பு மருமகனும், சாந்தகுமாரியின் அன்புக் கணவரும், சுபசக்தி, சுபமதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்மரூபன், கோகுலன் ஆகியோரின் மாமனாரும், திரிஷிகா, வருஷ்ணவன், டிஷானியா ஆகியோரின் பாசமிகு பேரனும், நாகேஸ்வரியின் சகோதரனும், அருந்ததியின் உடன்பிறவாச் சகோதரனும், ஜெயக்குமார், உதயகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.02.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 12.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கரையான்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
**077 640 4724**

(CS 23677) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 21 . 05 . 1938



இறப்பு 22 . 02 . 2023

## திருமதி வள்ளிநாயகி சிவபாதரத்தினம்

நல்லூரைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிநாயகி சிவபாதரத்தினம் கடந்த (22.02.2023) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - தங்கச்சியம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற சிவபாதரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கிருஸ்ணசாமி - அஞ்சுகம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான கைலாசபதி, இராசநாயகி, கேதீஸ்வரன், வேதநாயகி மற்றும் நிலாதாச்சி, நாகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவசாமி (UK), சிவகாமி (பிரான்ஸ்), சிவசிவா (உதவிக்கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம்), சிவமயம் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், வனஜா (UK), இதயமூர்த்தி (பிரான்ஸ்), பத்மலோசினி (ஆசிரியர், யா/ மகாஜனக்கல்லூரி), புஸ்பாஞ்சலி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவநயன், சிவநுயன், சிநோஜன், ஆரோகணா, வர்மன், வாசகி, சிவோதயன், சிவேதன், சிவனுஜா, சிவரிஷி, சிந்தூரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (26.02.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
077 672 8432

(CS/ 23642)4,6

தகவல்:
குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 07 . 08 . 1943



மறைவு 08 . 03 . 2022

## கார்த்திகேசு அம்பிகாபதி

குடும்ப குலவிளக்காய் விளங்கிய
எங்கள் அன்புத் தெய்வமே
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
ஆறாது உங்கள் பிரிவுத்துயர்
என்றென்றும் உங்கள்
அன்பு நினைவுகளுடன் ஆத்ம சாந்திக்காய்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்

குட்செட் வீதி, வவுனியா.

குடும்பத்தினர்.

(CS/23641)4,6

# 6ஆம் ஆண்டு நினைவு அஞ்சலியும் 20ஆவது பிறந்தநாள் நினைவும்



## அமரர் தவத்துரை ஹரிஷன்

(யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி - தரம் 8 மாணவன்)

ஆண்டுகள் ஆறு ஓடி விட்டதே
அன்பு மகனே ஹரிஷ் குட்டி
ஆறமுடிய வில்லையே – எம்மால்
வேதனையில் வதங்குகின்றோமே

கண்ணை இமை காப்பது போல்
கண்ணுக்குள் வைத்து உன்னை
காத்து வந்த போதும் – கொடிய
காலனவன் டெங்கு எனும் நோயால்
காவு கொண்டு விட்டானே!

IC வாட்டினுள்
அனுமதித்திருந்த போதும் – நாம்
எள்ளளவும் எண்ணவில்லை – நீர்
எம்மைவிட்டு வெகுதூரம் செல்வீர் என்று

அம்மாவுக்கும் தங்கைக்கு நான் தான்
காவலன் என அடிக்கடி கூறுவீர் – இப்போ
அம்மாவும் தங்கையும் தனித்திருந்து
தவிப்பது உமக்குப் புரியுமா?

எம்மை யெல்லாம் ஆறாத்துயரில் தவிக்க விட்டு
கண்மூடி திறப்பதற்குள் நீர் விண்ணகம்
சென்றுவிட்ட போதிலும் – உன் நினைவுகள்
நாம் வாழும் காலம் வரை
எம்முடன் வாழ்ந்து கொண்டே இருக்கும்.

பிறப்பு 14.02.2003

இறப்பு 03.03.2017



திதி:–
மாசி வளர்பிறை ஷஷ்டி



ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உன் பிரிவுத் துயரில் வாடி நிற்கும்

அப்பா, அம்மா, தங்கை மது,
கச்சேரி மாமா, ஆசைமாமா, பெரியப்பா, பெரியம்மா,
சிச்சு பெரியம்மா, அக்காமார், அத்தான்மார், அண்ணா, அண்ணி,
மருமக்களான - ரஸ்வினா, சயன், அனுசாலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி வாடகைக்கு

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதி, பெருமாள் கோவிலடியில் கோயிலுக்கு முகப்பாக உள்ள வீதியில் உள்ள முதலாவது காணி (2 பரப்பு) குத்தகை அல்லது மாத வாடகை அடிப்படையில் வாடகைக்குத் தரப்படும்.
ரியூசன் நடத்துவதற்கு மற்றும் களஞ்சியசாலையாகவும் பயன்படுத்த முடியும்.
தொடர்புகளுக்கு : +94 77 161 4761


## யாழ்ப்பாணத்துக்கான
# நீர்வழங்கல் திட்டத்துக்கு பெருமளவு மரங்கள் தறிப்பு

### வனாந்தரமாக மாறும் என பச்சிலைப்பள்ளி மக்கள் விசனம்

கிளிநொச்சி, பெப்.25

யாழ்.மாவட்டத்துக்கான நீர்வழங்கல் திட்டத்துக்கென கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட புதுக்காட்டுச் சந்தி தொடக்கம் தாளையடி வரையான பிரதான வீதியின் இருமருங்கிலுமுள்ள பழைமையான மரங்கள் தறிக்கப்படுகின்றன. அதனால் இந்தப் பகுதி வனாந்தரமாக மாறவுள்ளது என மக்கள் விசனித்துள்ளனர்.

இதுதொடர்பில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர், மின்சாரசபை மற்றும் நீர்வழங்கல் அதிகாரசபையினருடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது மக்களால் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது. அவர்கள் மேலும் குறிப்பிடுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட புதுக்காட்டுச்சந்தி தொடக்கம் தாளையடி வரையிலான பிரதான வீதியில் நீர்வழங்கல் குழாய் பொருத்தும் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இந்தச் செயற்பாட்டுக்கு இடையூறாக உள்ள மரங்கள் அழிக்கப்படுகின்றன.

அதற்கும் மேலதிகமாக இந்த வீதியில் 100 க்கும் மேற்பட்ட தென்னை, 80 க்கும்,மேற்பட்ட பனை உட்பட பெரிய மரங்கள் மின்சாரசபையால் தறிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. முன்பதாக வீதியின் இடது பக்கத்திலுள்ள மரங்கள் அழிக்கப்பட்ட நிலையில் தற்போது மறுபக்கத்திலுள்ள மரங்களும் அழிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. யாழ்.மாவட்டத்துக்கான நீர்வழங்கல் திட்டத்தை நாம் தடுக்கவில்லை. இந்தத் திட்டத்துக்கு பூரண ஆதரவளிப்போம்.

ஆனால், இந்தத் திட்டத்துக்காக மரங்களை அழிப்பதால் எமது பிரதேசம் வனாந்தரமாக மாறும். குறித்த வீதியூடாக மக்கள் போக்கு வரத்து அதிகமாகக் காணப்படும் நிலையில் சீரான பொதுப்போக்கு வரத்து வசதிகள் அதிகமின்மையால் பயணிகள் துவிச்சக்கரவண்டிகள் மற்றும் கால்நடையாகப் பயணிக்கின்றனர். அவர்கள் இளைப்பாறுவது இந்த மர நிழல்களிலேயாகும். இதனால் பெரும் சிரமங்களுக்கு நாம் முகம் கொடுக்க நேரிடும் - என்றனர்.

கலந்துரையாடலின்போது பிரதேச செயலாளர் கூறுகையில்,

அழிக்கப்படும் மரங்களுக்குப் பதிலாக குறிப்பிடப்பட்ட சில இடங்களில் சிறியளவிலான நிழல் தரும் மரங்கள் வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். புதுக்காடு தொடக்கம் தாளையடி வரையிலான பிரதான வீதியின் இடையிடையே பேருந்துத் தரிப்பிடம் அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் அழிக்கப்படும் மரங்களுக்கான நஷ்டஈடுகளும் பெற்றுத் தரப்படும் - என்றார். (ச-113)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



மலர்வு 10 - 04 - 1932 உதிர்வு 27 - 01 - 2023


அமரர் திருமதி
### குமாரசிங்கம் தங்கம்மா

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியையும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (25.02.2023) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து முற்பகல் 11.00 மணியளவில் இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவசுப்பிரமணியர் சுவாமி கோயில் திருமண மண்டபத்தில் மதிய போசன நிகழ்வு நடைபெறும் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். இதனை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் கிழக்கு,
குமாரலிங்கம் வீதி, மஞ்சத்தடி.

குடும்பத்தினர்
077 670 3396

## மரண அறிவித்தல்



அன்னை மடியில் 12 - 01 - 1949 ஆண்டன் அடியில் 13 - 02 - 2023

### கணபதிப்பிள்ளை அம்பிகைபாகன்

காரைநகர் வாரிவளவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை அம்பிகைபாகன் கடந்த (13.02.2023) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற (இங்கிரியா) வர்த்தகர் கணபதிப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், வலந்தலையைச் சேர்ந்த முன்னாள் புகையிரத நிலைய அதிபர் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், சந்திராவின் அன்புக் கணவரும்,அபிராமியின் அன்புத் தந்தையும், விபுலனின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பூரணம், இராஜேஸ்வரி, பத்மநாதன், நீர்கொழும்பு வர்த்தகர் பாலசிங்கம் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான வி.பொன்னம்பலம் (கம்யூனிஸ் கட்சியின் யாழ். தலைவர்), டாக்டர் இளையதம்பி, கமலாம்பிகை, மற்றும் சறோஜினிதேவி, சித்திரா, தவக்குமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் எதிர்வரும் (27.02.2023) திங்கட்கிழமை நடைபெறும் என்பதனை மிக மனவருத்தத்துடன் அறியத்தருகிறோம். ஞாயிறு எமது இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

யசோ பவுணின் சென்ரர்,
No.79, கடற்கரை வீதி,
நீர்கொழும்பு.
031 223 5106 (CR 39284) (3/6)

தகவல்: T.K பாலா
அழகாபுரி,
வாரிவளவு, காரைநகர்.
076 304 8571

# யாழ். பல்கலையில் ஓவியக் கண்காட்சி



யாழ்ப்பாணம், பெப். 25

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ஐக்கிய நாடுகள் வளர்ச்சித்திட்டத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த ஓவியக் கண்காட்சி, யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமாகியது. இந்தக் கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமைவரை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவத்துக்கான நிலையம், ஐக்கிய நாடுகள் வளர்ச்சித்திட்டத்துடன் இணைந்து "இலங்கையின் பொருளாதார நெருக்கடியானது பால்நிலைகளில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள்" என்னும் தலைப்பில் ஓவியப்போட்டி ஒன்றைக் கடந்த வருடம் நடத்தியிருந்தது. இதற்காக இலங்கை முழுவதும் உள்ள ஓவியர்களிடமிருந்து பொருளாதார நெருக்கடியின் போதான வன்முறைகள், உணவுப் பற்றாக்குறை, வறுமை, போக்குவரத்துச் சிரமங்கள், அதிகரித்த வேலையின்மை, கல்வி, ஆரோக்கியம், ஊட்டச்சத்து, பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவம், விவசாயம், வீட்டுத்தோட்டம், வெளிநாட்டு நாணயப் பற்றாக்குறை மற்றும் உள்ளூர் நிர்வாகம் போன்ற உப தலைப்புக்களில் வரையப்பட்ட சுமார் ஆயிரத்து 925 ஓவியங்கள் சேகரிக்கப்பட்டிருந்தன. அவையே பல்கலையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த ஓவியப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14)

## மரண அறிவித்தல்



### வெற்றிவேல் செல்வரட்ணம் (செல்வம்)

கேசாவில் பிள்ளையார் கோயிலடியை பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வெற்றிவேல் செல்வரட்ணம் (செல்வம்) நேற்று (24.02.2023) காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி, மகேஷ்வரியின் அன்பு மகளும், வெற்றிவேலின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னையா தெய்வானையின் அன்பு மருமகளும், செந்தூர்ராஜன், சிவப்பிரியா, இவான்சலீன் சாமினா, அஜித்குமாரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நாளை (26.02.2023) ஞாயிற்றுக்கிழமை ஒரு மணியளவில் நடைபெற்று, தாவடி கல்வாரி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
பிள்ளைகள்.
(CR 39323) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் அணிகளின் போர் சென்.பற்றிக்ஸ் வலிமை!




யாழ்ப்பாணம், பெப். 25

பொன் அணிகளின் போர் என்று அழைக்கப்படும் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான வரலாற்றுச் சிறப்புமிக்க 106ஆவது கிரிக்கெட் ஆட்டத்தின் முதலாவது நாள் நிறைவில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வலுவான நிலையில் உள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நேற்று இந்த ஆட்டம் ஆரம்பித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 9 இலக்குகளை இழந்து 272 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பதிலுக்குக் களமிறங்கிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி நாள் முடிவில் 2 இலக்குகளை இழந்து 33 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. (ட-125)


## வேலையாட்கள் தேவை

வாகன உதிரிப்பாக விற்பனை நிலையத்திற்கு கணக்காளர் (பெண்கள்) விற்பனையாளர் தேவை. வயது எல்லை (20 - 30) மானிப்பா யை அண்டிய பிரதேசம் விரும்பத்தக்கது.

தொடர்பு கொள்ள திங்கள் முதல் சனி வரை

முற்பகல் 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணி வரை

தொடர்பு கொள்ளவும்: 075 632 8578

(CS 23661)(3/6)

யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கில்

2ஆவது வாரமாக

Dr.சிவன்சுதனின்

முழுநீளத் திரைப்படம்

தினசரி காட்சிகள்

கிழமை நாட்களில் மாலை 5.30 மணி

சனி,ஞாயிறு மாலை 4.30 மணி

இது எமது சொந்த மண்ணின் கதை

மாணவர்களுக்கு விசேட சலுகை தொடர்புகளுக்கு 0778256757


## நினைவு

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையும் யாழ்ப்பாணம் தமிழ்ச்சங்கமும் இணைந்து நடத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் 200ஆவது நினைவு நிகழ்வு, சைவபரிபாலன சபை மண்டபத்தில் நாளைஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9 மணிக்கு இடம்பெற வுள்ளது. (ஒ-14)

## குளவிக் கொட்டுக்கு இலக்காகி மாணவர் உட்பட ஐவர் காயம்

வவுனியா, பெப். 25

வவுனியா கோவில்குளம் பாடசாலைக்கு அருகாமையில் கடந்த செவ்வாய்க்கிழமை குளவிக் கொட்டுக்கு இலக்காகி மாணவர் உட்பட ஐந்து பேர் காயங்களுக்குள்ளாகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காற்றில் கலைந்த குளவி வீதியால் சென்றவர்களைத் தாக்கியுள்ளது. இதில் பாடசாலை சென்ற மாணவர் ஒருவர் உட்பட 5 பேர் காயங்களுக்குள்ளாகி வவுனியா பொது மருத்துவமனையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டனர்.

மேலதிக சிகிச்சைகளின் பின்னர் பாதிக்கப்பட்டவர்கள் நோயாளர் விடுதிக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ஒ-14)


## மரண அறிவித்தல்

### கதிரேசு பொன்னுச்சாமி

தோற்றம் : 09.08.1940 மறைவு : 22.02.2023



மீசாலை வடக்கு, மீசாலையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கதிரேசு பொன்னுச்சாமி அவர்கள் கடந்த (22.02.2023) அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு: 077 86 49 923

(CR 39322)1-6

## மரண அறிவித்தல்

பிறப்பு 28 10 1938



இறப்பு 23 02 2023

### திரு.கந்தையா சுவாமிநாதன்

(கொழும்பு 11, நான்காம் குறுக்குத் தெரு – ஜோர்ஜ் அன் கம்பனி உரிமையாளர்)

யாழ். புங்குடுதீவு, 11ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், கொழும்பு, யாழ்ப்பாணம், கனடா ஆகிய இடங்களை வதிவிடமாக கொண்டவரும், கொழும்பு 11, 4ஆம் குறுக்குத் தெரு - ஜோர்ஜ் அன் கம்பனி உரிமையாளருமான திரு.கந்தையா சுவாமிநாதன் அவர்கள் 23.02.2023 வியாழக்கிழமை அன்று 71/5, அரசடி வீதி, யாழ்ப்பாணம் இல்லத்தில் இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைச் சேர்ந்த கந்தையா செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைச் சேர்ந்த சுப்பையா செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், வரதலஷ்மியின் ஆருயிர் கணவரும், ஈஸ்வரநாதன் (கனடா), ரகுநாதன் (ஜோர்ஜ் கம்பனி), ஜெகநாதன் (கனடா), சிவநாதன் (கனடா), செந்தில்நாதன் (கனடா), கீதா, நேசநாதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், செல்வலஷ்மி, கீதாஞ்சலி, புஸ்பலதா, மதிவதனன் ஆகியோரின் அன்பு மாமனாரும், விஷ்ணுவேந்தன், சிவவேந்தன், கஜவேந்தன், ஜொகானா, சுயேன், சுயானா, கீர்த்தனா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான இராசலிங்கம், சண்முகநாதன், செல்வநாதன் (கனடா), பரமேஸ்வரி (கனடா), கதிர்காமநாதன் (கனடா), பேரின்பநாதன் (சுவிஸ்), யெகதீஸ்வரி (கனடா), குணேஷ்வரி (லண்டன்), சிவலிங்கநாதன் (லண்டன்), காலஞ்சென்ற இலங்கநாதன், ராயேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு சகோதரரும், காலஞ்சென்றவர்களான கணேஷ், மனோன்மணி, கந்தசாமி, கனகலிங்கம், சரஸ்வதி, குணபாலலஷ்மி (கனடா), மகாதேவன், வடிவேலு (சுவிஸ்), நாகலஷ்மி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கமலபூசணி, தனலஷ்மி, சத்தியலஷ்மி, காலஞ்சென்ற டெலிக்காதேவி, காலஞ்சென்ற சாரதாம்பாள், இந்திரா, முகுந்ததாஷன், அரியரட்ணம், சிவாநந்தன், விஜயசேகர் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான வடிவாம்பிகை, றஞ்சினிதேவி, பொன்னம்பலம், தியாகராஜா, சிவராஜா, யோகம்மா, விஜயலஷ்மி, நவலீலா ஆகியோரின் அன்பு சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 71/5, அரசடி வீதி, யாழ்ப்பாணம் இல்லத்தில் 24.02.2023 வெள்ளிக்கிழமை மற்றும் 25.02.2023 சனிக்கிழமை பார்வைக்கு வைக்கப்பட்டு, 26.02.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

தகவல்:

ரகுநாதன் (மகன்) - 0777 350826, செந்தில்நாதன் (மகன்) - 0016 47655360[illegible]

71/5, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 24 10 1946



மறைவு 23 02 2023

### சேதுலிங்கம் சேதுகாவலர்

மறுகம்புலவை பிறப்பிடமாகவும், பலாலியை வசிப்பிடமாகவும் அச்சுவேலி சூசையப்பர் வீதி பத்தமேனியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சேதுலிங்கம் சேதுகாவலர் அவர்கள் கடந்த (23.02.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சேதுலிங்கம் - இராசாத்தி தம்பதியரின் அன்பு மகனும், சுப்பிரமணியம் - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், இராசமணி அவர்களின் பாசமிகு கணவரும், செல்லப்பா, கணபதிப்பிள்ளை, சிவசுப்பிரமணியம், செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், விஜயபாரதி, விஜயராணி, ஜெயபாலசிங்கம், விஜயலீலா, குமரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நவரத்தினராஜா, குணராஜா, றேணுகா, கமலகுமாரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜனன், கார்த்திகன், கிரோஷிகன் கோபிதன், கேசிகன், அபர்ணா, மதுஷன், சுயானா, சானுகா, தாரகி, திவானா, மத்தியூஸ், பிரிட்னி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அச்சுவேலி பத்தமேனியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நாளை (26.02.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் பலாலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சூசையப்பர் வீதி, பத்தமேனி, அச்சுவேலி.

தகவல்: குடும்பத்தினர். சே.ஜெயபாலசிங்கம் 077 1770 752

(CR 39319) 1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தலுக்குப்...

தேர்தலைக் காலம் தாழ்த்துமாறுகோரி ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி டபிள்யூ.எம்.ஆர்.விஜேசுந்தரவால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான பரிசீலனை எதிர்வரும் மே மாதம் 11 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உயர்நீதிமன்றம் அறிவித்தது. இதற்கு முன்னர் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையிலேயே தேர்தல் குறித்த தீர்மானம் எடுக்கப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருந்தது. இந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை இது தொடர்பில் தீர்மானிப்பதற்காக முற்பகல் 10.30 மணியளவில் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவா தலைமையில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலின்போதே மார்ச் 3 ஆம் திகதி தேர்தலுக்கான புதிய திகதியை அறிவிக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மார்ச் 9ஆம் திகதி நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவால் அரசமைப்பு ரீதியில் முன்னெடுத்த செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள் அடங்கிய அறிக்கையுடன் தேர்தலுக்குத் தேவையான நிதியை திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு தலையீடு செய்யுமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

தேர்தல் ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் எழுந்துள்ள பல்வேறு காரணிகளால் எதிர்வரும் மார்ச் 9 ஆம் திகதி நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த உள்ளூராட்சித் தேர்தல் அன்றைய தினத்தில் இடம்பெறாது என்பதுடன், தேர்தல் இடம்பெறும் தினத்தை மார்ச் 3 ஆம் திகதி மீண்டும் அறிவிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (அ-ம)

## ரணில்...

நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் ஜே.வி.பி. ஆதரவாளர்களின் அலையைக் கண்டு ரணில் - ராஜபக்ச கூட்டணியினரும், சஜித் பிரேமதாஸ அணியினரும் கதிகலங்கி நிற்கின்றனர். இந்த நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசமைப்பையும், சட்டங்களையும் மீறி தேர்தலை ஒத்திவைக்க முயல்கின்றார். தேர்தலை ஒத்திவைக்குமாறு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர் என்று தெரிவிக்கும் ஜனாதிபதி ரணில், அவ்வாறு கோரிக்கை விடுத்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் தகவல்களை உடனடியாக வெளிப்படுத்தவேண்டும்' - என்றார். (அ-ம-22)

## யாழ். போதனா...

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர்அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் கழிவுகளை தெல்லிப்பழையில் எரிக்காமல், எதிர்வரும் காலங்களில் வவுனியாவில் எரிப்பது என்று வடமாகாண சுகாதார அமைச்சின் அதிகாரிகளின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இவ்வாறான ஒருமுடிவை எடுப்பதற்குமுன் வவுனியா மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் மக்களுடன் கலந்துரையாடப்பட்டிருக்கவேண்டும். வெறுமனே அலுவலகத்துக்குள் இருந்துகொண்டு எடுக்கும் முடிவுகள் சமூகங்களுக்கிடையில் பிரிவினையையும் குழப்பத்தினையும் ஏற்படுத்தும். இதனை அதிகாரிகள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

வவுனியா மருத்துவமனையின் கழிவுகள் தற்போது ஓமந்தை மருத்துவமனையின் எரிக்கும் நிலையத்தில் எரிக்கப்படுவதால் அருகாமையிலுள்ள ஓமந்தை மத்திய கல்லூரி மாணவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறான சூழலில் யாழ். போதனா மருத்துவமனையின் கழிவுகளை வவுனியாவில் எரிக்க முற்படுவதானது ஏற்றுக்கொள்ளமுடியாத செயற்பாடாகும். எனவே புதிய பொறிமுறைகளையும் திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவத்தினூடான புதிய செயற்றிட்டங்களையும் கையாண்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக் கழிவுகளை யாழ்ப்பாணத்திலேயே எரிப்பதற்கு வடமாகாண சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (அ-ம-110)

## கனேடியத்...

உள்நுழைந்த நால்வர் அடங்கிய குழுவே வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியதுடன் 3 ஆயிரம் டொலர் பணத்தையும், கடவுச்சீட்டு உள்ளிட்ட பெறுமதியான உடைமைகளையும் அபகரித்துச் சென்றுள்ளது என்று பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

சம்பவத்தின்போது வீட்டில் ஆசிரியர்கள் இருவரும் தங்கியிருந்துள்ளனர். அவர்களைக் கட்டிவைத்துவிட்டு இந்தக் கொடூரத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்படுகின்றது. படுகாயமடைந்தவர்கள் படகுமூலம் ஊர்காவற்றுறைக்குக் கொண்டுவரப்பட்டு, பின்னர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம)

## தாயின்...

நீண்ட நாள்களாகத் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. சந்தேகநபர் தலைமறைவாகியுள்ள நிலையில், அவர் பொலிஸாரால் தேடப்படுகின்றார். (ம-ஒ-5)

## நிரந்தரமாக...

மாற்றப்படுகின்றது. எதிர்காலத்தில் மாணவர்கள் இணைகின்ற சந்தர்ப்பத்தில் குறித்த பாடசாலை தொடர்ச்சியாக இயங்கும் என்று யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் 'உதயனுக்கு' தெரிவித்தார்.

நீர்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை மூடப்பட்டதாக நேற்றையதினம் தகவல்கள் வெளிவந்த நிலையில், அது தொடர்பில் வினவியபோது அவர் உதயனுக்கு மேலும் தெரிவித்ததாவது:-

நீர்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் கடந்த இரண்டு வருடங்களாக முதலாம் தரத்துக்கு மாணவர்கள் சேரவில்லை. ஐந்தாம் தரத்தில் கல்வி கற்ற ஐந்து மாணவர்கள் ஆறாம் தரத்துக்காகப் பிறிதொரு பாடசாலைக்குச் சென்றுள்ளனர். மூன்றாம் தரத்தில் ஒரேயொரு மாணவரும் நான்காம் தரத்தில் இரு மாணவர்களுமென மூன்று மாணவர்களே அந்தப் பாடசாலையில் கல்வி கற்றனர். மூன்று மாணவர்களுக்காக இரு ஆசிரியர்களும் ஒரு அதிபரும் பொறுப்பாக இருந்தனர். இந்த நிலையிலேயே மாணவர்கள் அயற் பாடசாலைகளுக்குச் செல்ல இணங்கியதை அடுத்து அந்தப் பாடசாலை வலயக்கல்வி அலுவலகத்தின் வள அபிவிருத்தி நிலையமாக மாற்றப்பட்டுள்ளது. மாணவர்கள் மீளச் சேருகின்ற பட்சத்தில் நிச்சயமாக குறித்த பாடசாலை மீண்டும் பாடசாலையாகச் செயற்பட ஆரம்பிக்கும் - என்றார். (ம-125)

## கப்பம்...

பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத்ன தெரிவித்தார்.

யாழ்ப்பாண நகர, பஸார் வீதி வர்த்தகர்களுடன் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வர்த்தகர்கள் தமது அசௌகரியங்கள் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கோ, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்துக்கோ அல்லது பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்துக்கோ முறையிடமுடியும். முறைப்பாடுகள் கிடைத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். வர்த்தகர்கள் முறைப்பாடு செய்வதற்கு எந்த விதத் தயக்கமும் கொள்ளத் தேவையில்லை. யாழ்ப்பாண நகரப் பகுதியில் உள்ள போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றார்.

பஸார் வீதியில் ஒரு வழிப் பாதை காரணமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வாகனத் தரிப்பிடம் தொடர்பாக இந்தக் கலந்துரையாடலில் முக்கியமாக ஆராயப்பட்டது. வீதியில் இருமருங்கும் ஒவ்வொரு தினமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வாகனத் தரிப்பிட வசதியில் சில மாற்றங்கள் செய்யப்படவேண்டும் என்று வர்த்தகர்கள் சுட்டிக்காட்டினர்.

வாகனங்கள் தரிக்க விடப்படும்போது வர்த்தக நிலையங்களுக்கு மக்கள் செல்லக்கூடியவாறு வர்த்தக நிலையங்கள் முன்பாக இடைவெளி விட்டு வாகனங்களைத் தரிக்க வசதிகள் செய்யப்படவேண்டும் என்று வர்த்தகர்களால் கோரப்பட்டது. அதை ஏற்றுக்கொண்ட பொலிஸார், இது தொடர்பில் நாளை (இன்று) நேரில் சென்று ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தனர். (அ-ம-26)

## உயிருடன்...

தெரிவித்தனர் - என்று தெரிவித்துள்ளார் பழ.நெடுமாறன்.

தமிழக ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரபாகரன் இருக்கின்றார் என்று நான் தெரிவித்திருப்பது யூகமும் அல்ல. ஒரு வித ஆசையில் தெரிவித்ததும் அல்ல. நான் உண்மையைத் தெரிவித்தேன். பிரபாகரனின் குடும்பத்தினர் தெரிவித்த தகவலைத்தான் நான் தெரிவித்துள்ளேன். ரஷ்யப் புரட்சியை முன்னின்று நடத்திய லெனின் ஆறு ஆண்டுகள் சுவிற்ஸர்லாந்தில் தலைமறைவாக இருந்தார். அவரது இயக்கம் தடைசெய்யப்பட்டிருந்தது. அதன் பின்னர் அவர் மீண்டும் வந்து புரட்சியை முன்னெடுத்தார். வியட்நாம் போராட்டத்தை முன்னெடுத்த கோ சூமின் பிரான்ஸ், சீனா என பல நாடுகளில் மறைவாக இருந்தார். பின்னாள்களில் போராட்டத்தை முன்னெடுத்தார். தலைவர்கள் போராட்டத்தை முன்னெடுக்கின்றபோது பின்னடைவுகள் ஏற்பட்டால் தலைமறைவாக இருப்பது இயல்பு. தேசியத் தலைவர் பிரபாகரன் தன் உயிருக்குப் பயந்து தப்பிச் செல்லவில்லை. ஆனால், அவர் இருந்தால்தான் போராட்டத்தை முன்னெடுக்கலாம் என்று மூத்த தளபதிகள் அவரை அங்கிருந்து மிகுந்த கட்டாயத்தின் அடிப்படையில் அனுப்பிவைத்தனர். இதை நான் நன்குஅறிவேன். காலம் கனிந்து வரும்போது அவர் வருவார். பிரபாகரன் இருக்கின்றார் என்பது மட்டும்தான் உண்மை. இதை மட்டும்தான் இன்று என்னால் தெரிவிக்க முடியும். அவர் எங்கிருக்கின்றார்? எப்போது வருவார்? என்பது தொடர்பில் நாள்கள் கூடிவரும்போது தெரிவிப்பேன். சரியான தகவல்கள் இல்லாவிட்டால் இப்படி நான் சொல்லியிருக்கமாட்டேன் - என்றார். (அ-ம)

## யாழ். ராணி...

உயிரிழந்த முதியவரின் சடலம் ஆனையிறவு ரயில் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-113)

## காரை விட்டு...

காட்டுக்குள் காரைக் கைவிட்டுத் தப்பியோடியவர்கள், கடந்த வாரம் நாவற்குழிப் பகுதியிலுள்ள எரிபொருள் நிலையத்தில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:- கடந்த 15ஆம் திகதி நாவற்குழிப் பகுதியிலுள்ள எரிபொருள் நிலையத்தில் வைத்து, ஊழியர் ஒருவர் மீது மோட்டார் சைக்கிளில் வந்த குழுவால் துரத்தித்துரத்தி வாள்வெட்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. சம்பவ தினத்தன்று காரொன்றில் வந்த சிலர் கியூ.ஆர். முறைமை இல்லாமல் எரிபொருள் நிரப்புமாறு கேட்டுள்ளனர். நிரப்பு நிலையத்தினர் அதற்கு மறுப்புத் தெரிவித்தனர். இதனால், காரில் வந்த குழுவினர்தான் இந்த வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம் என்று முன்னதாகவே சந்தேகம் வெளியிடப்பட்டது. இதனால், அந்தக் காரின் தகவல்கள் பெறப்பட்டு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். இந்த நிலையில், சந்தேகத்துக்கு இடமான கார் மறவன்புலவுப் பகுதியில் பயணிக்கின்றது என்று பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து காரை பொலிஸார் பின்தொடர்ந்துள்ளனர். அப்போது காரை பற்றைக்காட்டுக்குள் கைவிட்டுவிட்டு இளைஞர்கள் தப்பியோடியுள்ளனர்.

மீட்கப்பட்ட கார் மிஹிந்தலையைச் சேர்ந்த பெரும்பான்மையினத்தவர் ஒருவருக்குச் சொந்தமானது என்றும் அவரிடம் காரை தென்மராட்சியைச் சேர்ந்த கும்பலொன்று வாடகைக்கு பெற்றுள்ளது எனவும் தெரியவந்துள்ளது. நீதிமன்ற அனுமதியுடன் காரின் கதவுகளை திறந்து பொலிஸார் சோதனையிட்டபோது எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வாள்வெட்டில் ஈடுபட்ட இளைஞன் அணிந்து வந்த ஆடை காரில் காணப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிமாவட்ட யாசகர்களால் வர்த்தகத்துக்குப் பாதிப்புக்கள்

*பொலிஸாருடனான சந்திப்பில் சுட்டிக்காட்டு*

வெளிமாவட்டங்களில் இருந்து யாசகம் பெற வருவோரும், சாம்பிராணி விற்க வருவோரும் மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் நடந்துகொள்கின்றனர். அவர்கள் எமது வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் நின்று இவ்வாறு நடந்துகொள்வதால் எமது வர்த்தகம் பாதிக்கப்படுகின்றது என்று யாழ். நகரப் பகுதி வர்த்தகர்கள் பொலிஸாரிடம் சுட்டிக்காட்டினர். பொலிஸாருடனான நேற்றைய சந்திப்பிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

வெளிமாவட்டங்களில் இருந்து யாசகம் பெற வருவோரும், சாம்பிராணி விற்க வருவோரும் எமது வர்த்தக நிலையங் களுக்கு முன்னால் நின்று மக்களைக் கட்டாயப்படுத்தும் விதமாக நடந்துகொள்வதால் பொதுமக்கள் வர்த்தக நிலையங்களுக்கு வராமல் (குறித்த யாசகர்கள் நிற்கின்ற) அடுத்தடுத்த வர்த்தக நிலையங்களுக்குச் செல்கின்றனர். இதனால் வர்த்தக நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன என்றனர்.

இது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸாரின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(அ-ம-26)

## Win Repair

உங்கள் குளிர்சாதனப்பெட்டி பழுதடைந்து விட்டதென கவலைப்படாதீர்கள். உங்கள் இடத்திற்கே வந்து திருத்திக்கொடுக்கின்றோம்.

தொடர்பு : 076 9064 682

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தாவடியில் 5 பரப்புக் காணி விற்பனைக்கு.

மூன்று பரப்பாகவும். இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.

K.K.S. வீதியில் இருந்து இரண்டாவது காணி.

தாவடி சந்தியிலிருந்து 100 M தூரத்தில்.

தொடர்பு:- 076 48 54 390
076 43 65 814

(CS 236821) 1-6

## Classes

A/L - 2024, 2023 ஆகிய பிரிவுகளுக்கான இணைந்த கணிதம் தனியாகவோ/ குழுவாகவோ கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு (CS/49264)4.6

077 062 4815

## காணி விற்பனைக்கு

நுணாவில் (A9) பிரதான வீதியில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. 2 பரப்பாகவும் பிரித்துத் தரப்படும். (தரகர் தேவையில்லை) மேலதிக விபரங்கள் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். நேரில் சந்திப்பதற்கான நேர ஒழுங்கு மட்டும் T.P தொடர்பாடல் பயன்படுத்தப்படும். உங்கள் பொன்னான நேரத்தை வீணடியாதீர்கள்.

(CS/23674)4-6

காணி உரிமையாளர்:- 076 690 6272

## வீட்டு பணிப்பெண் தேவை

நல்லூர் பகுதியில் உள்ள வீடு ஒன்றிற்கு பிள்ளை பராமரிப்பு மற்றும் வீட்டு வேலைக்காக வீட்டு பணிப்பெண் தேவை.
(அண்மித்த பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)

தொடர்பு : 077 98 66 032

## English Classes

**Gr.1 to O/L**

**Grammar with Spoken**

வீடு வந்து கற்பிக்கப்படும்.

(CS/21651)4-6

077 331 4608 - யாழ்ப்பாணம்

## மணமகன் தேவை

நோர்வேயில் வசிக்கும் 31 வயதுடைய பெண்ணிற்கு இலங்கையில் வசிக்கும் மணமகன் தேவை.
(ஜாதகம் எதிர்பார்க்கப்படமாட்டாது)

(CS 49251)(3/6)

077 427 1512

## சிற்பங்கள் விற்பனைக்கு


ஸ்ரீ பூமாதேவி ஆலய சிற்பக்கலைக் கூடம் சிற்பங்கள் விற்பனைக்கு உண்டு.

(CS 23672) (3/6)

077 312 5924, 075 545 0131

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
06 - 07 - 1933



உதிர்வு
26 - 01 - 2023

## அமரர் சபாபதி மாணிக்கம்

தேடக் கிடைக்காத எங்கள் தந்தையே!
தேசமெல்லாம் தேடுகின்றோம்
பாசத்தை சொரிந்து நம் வாழ்வுக்காய் பாடுபட்டு
எம்மை தவிக்கவிட்டு எங்கு சென்றீர்கள் - அப்பு
அன்பு முகம் கொண்டு ஆறுதல்
பொழிந்து இவ்வுலக வாழ்வில்
தூண் என துணை நின்ற இதயத் தெய்வமே!
நாம் உள்ளவரை உங்கள் நினைவிருக்கும்
எம் உள்ளமதில்
சாந்தி பெற வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி ....! சாந்தி ....! சாந்தி....!

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 23.02.2023 வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (25.02.2023) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கோடை வீதி,
வட்டுதெற்கு, வட்டுக்கோட்டை.
077 127 5941

நினைவலைகளுடன்
குடும்பத்தினர்

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 90 பரப்புக் காணி விற்பனைக்கு.

- பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 KM தூரம்
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
- புத்தூர் - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 M தூரத்தில்.
- நன்னீர் ஊற்று நிலம்.
- விவசாயம் செய்யவும், வீடு கட்டவும் உகந்த காணி.
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா மட்டும்.

தொடர்பு: 076 46 50 171
076 911 9371

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 54 பரப்புக் காணி விற்பனைக்கு.

- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 KM தூரத்தில்.
- புத்தூர் சோமாஸ்கந்தா வித்தியாலயத்திலிருந்து 1 KM தூரம்.
- புத்தூர் - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் காப்பெற் வீதியிலிருந்து இரண்டாவது காணி.
- அரச, தனியார் பேருந்துகள் செல்லும் வீதி.
- நன்னீர் ஊற்று நிலம்.
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.

தொடர்பு: 076 4350 614
077 6385 683

(CS 23656) (A) 1-6

## மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 07 . 1944



மறைவு
23 . 02 . 2023

## முருகேசு மகேசன்

(ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர் -நீர்ப்பாசனத் திணைக்களம்)

இருபாலையைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில், வவுனியா, வட்டக்கச்சி ஆகிய இடங்களை வதிவிடங்களாகவும் தற்போது 26, கதிரவேல் ஒழுங்கை அரியாலையில் வசித்துவந்தவருமான முருகேசு மகேசன் அவர்கள் கடந்த (23.02.2023) வியாழக்கிழமை காலமனார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு அம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா, மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், சுசிலாவின் பாசமிகு கணவரும், பவன், ஜெகன், லாகினி ஆகியோரின் அன்புத் தந்தையும், நிருபராஷ், யாழினி, அனுசியா ஆகியோரின் அன்பு மாமனாரும், அனேத்ரா, தக்சகன், சையின் நிலா, அகில், சியான் ஆகியோரின் அன்புப் பேரனும், தாரகேசன், அமரர் திலகவதி, ஜெய்வதி, புனிதவதி, இன்பவதி, சபேசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.02.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை கிழக்கு செக்கடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 84 155 43

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 23681) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.